DINA THANTHI

10 AUG 2023

PAGE 7

### ஒருங்கிணைந்த 4 ஆண்டு படிப்புக்கான

# தேசிய பொது நுழைவுத்தேர்வு புதுவையில் நடந்தது

புதுச்சேரி, ஆக.10-

மத்திய பல்கலைக்கழகங்களில் பி.ஏ. பிஎட்., பி.எஸ்சி. பிஎட் போன்ற ஒருங்கிணைந்த 4 ஆண்டு படிப்புகள் உள்ளது. பிளஸ்-2 முடித்தவர்கள் இந்த படிப்புகளில் நேரடியாக சேர்ந்து படிக்கலாம். இதற்காக நாடு முழுவதும் உள்ள மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டன. புதுவை பல்கலைக்கழகத்தில் படிக்க 16 ஆயிரம் பேர் விண்ணப்பித்து இருந்தனர்.

இந்த நிலையில் ஒருங்கிணைந்த படிப்புகளுக்கான தேசிய பொது நுழைவுத்தேர்வு நேற்று நாடு முழுவதும் 127 மையங்களில் மதியம் 2 மணி முதல் மாலை 5 மணி வரை நடந்தது. புதுவை மாநிலத்தில் மதகடிப்பட்டு கலிதீர்த்தாள்குப்பத்தில் உள்ள மணக்குள விநாயகர் பொறியியல் கல்லூரியில் தேர்வு மையம் அமைக்கப்பட்டு இருந்தது. அங்கு ஆன்லைன் மூலம் தேர்வு நடந்தது. இதற்காக மாணவர்கள் நேற்று மதியம் 12.30 மணி முதல் தேர்வு மையத்திற்குள் அனுமதிக்கப்பட்டனர். தேர்வர்கள் ஹால் டிக்கெட்டுடன் அடையாள அட்டை மட்டும் எடுத்துச்செல்ல அனுமதி வழங்கப்பட்டது. கைப்பை, செல்போன், புளூடூத் சாதனங்கள், கால்குலேட்டர் போன்ற எலக்ட்ரானிக் சாதனங்கள் கொண்டு செல்ல அனுமதிக்கப்படவில்லை.